**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXIII Cr.P.C)

**CMP NO. 579/2025**

**Witness No. 1**

**Date: 24.07.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.ரகேஷ்குமார் | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | தட்சிணாமூர்த்தி | மதம் | |
| கிராமம் | மாம்பாக்கம் | தொழில் | |
| வட்டம் | வண்டலூர் | வயது | 44 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the 24th **July 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**பிராமண வாக்குமூலம் :**

1. நான் மாம்பாக்கத்தில் உள்ள எஸ்பிஐ யூனிட்டி என்கிலேவ் என்ற அடுக்குமாடி குடியிருப்பில் என் மாமனார் திரு.ராஜேந்திரன் என்பவரும் ஓய்வு பெற்ற பாரத வங்கியின் ஊழியர் என்பதால் என் மனைவி சிவகாமி சுந்தரி என்பவரின் பெயரில் எம்பிளாக் பத்தாவது மாடியில் 5 வது வீட்டை கடந்த 2017 ஆண்டு வாங்கினேன். அந்த வீட்டை வாங்கியபிறகு அதில் எவ்வித வசதிகளும் பாரத வங்கி அலுவலர்கள் சங்கத்தினர் எங்களுக்கு செய்து கொடுக்கவில்லை. நாங்கள் அங்கு குடிபெயர்ந்தபிறகு அந்த அடுக்குமாடி குடியிருப்பு உரிய கழிநீர் சுத்திகரிப்பு நிலையம்,

போதிய மின்சார வசதியின்மை விதிமுறைகள் மீறப்பட்டு அந்த கட்டிடம் கட்டப்பட்டது, அது சம்பந்தமாக அந்த சங்கத்தின் பொறுப்பாளரான திரு. மோகன் முத்தையா என்பவரிடம் அது குறித்து பல முறை முறையீட்டும் அவர் எவ்வித நடவடிக்கை எடுக்கவில்லை.

2. அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். இதனிடையே என் மனைவியும் அந்த குடியிருப்பு சங்கத்தில் துணைதலைவராக இருந்தார். கடந்த 2020 ஆம் ஆண்டு நடந்த ஆண்டு பொதுகுழு கூட்டத்தில் மோகன்முத்தையா என் மனைவி சிவகாமிசுந்தரியை மேடையில் வைத்து வா போடி என்று பேசியும் ஆபாசமாகவும் திட்டினார். அது சம்பந்தமாக நாங்கள் தாழம்பூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். ஆனால் அந்த புகாரின் மீது போலிசார் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் எங்களை அழைத்து விசாரணை செய்யாமல் புகாரை முடித்து வைத்தார்கள். எனவே நான் தேசிய மகளிர் நல ஆணையத்திற்கு மின் அஞ்சல் மூலமாக புகார் அனுப்பி வைத்தேன். அந்த புகாரை விசாரணை செய்வதற்காக மகாபலிபுரம் மாவட்ட துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு அனுப்பிவைத்தார்கள்.

3. ஆனால் அங்கு விசாரணை செய்து விட்டு எதிரியின் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாது என்று எனக்கு அறிவுரை வழங்கி அனுப்பிவிட்டார்கள். மேலும் நீதிமன்றத்தில் மேல் நடவடிக்கை எடுக்க சொல்லி என்னிடமும் என் மனைவியிடமும எழுதி வாங்கி கொண்டார்கள். இதனிடையே அந்த சங்கத்தை சேர்ந்த எதிரியும் பிற சங்க பொறுப்பாளர்களும் எங்களை அடிக்கடி அவமானம் படுத்தும் என் மனைவி துணை தலைவராக இருந்தபோதிலும் கணக்கு

வழக்குகளை பார்க்கவும் அவரை அனுமதிக்கவில்லை. நாங்கள் ஆரம்பத்தில் அந்த கணக்கு வழக்கை பார்த்தபோது பில்டர் செய்யவேண்டிய பராமரிப்பு பணிகளை எதிரி நாங்கள் கட்டிய பராமரிப்பு பணிகளுக்கான தொகையில் இருந்து எடுத்து அப்போலோ கிளினிக் அமைக்க போவதாக சொல்லி செலவு செய்துள்ளார். அந்த விவரம் அங்கு வசிக்கும் அனைத்து குடியிருப்பு வாசிகளுக்கும் தெரியவந்ததால் அவர்கள் எதிர்க்க ஆரம்பித்தார்கள்.

4. கடந்த 2021 ஆம் ஆண்டிலிருந்து அங்கு நாங்கள் பேசுவதற்கும் எங்களுக்கு உரிமை இல்லை நாங்கள் ஏதேனும் மெசேஜ் அனுப்பினாலும் அங்கு வசிப்பவர்களுக்கு முறையாக சென்று சேர்வதில்லை. அதனை தொடர்ந்து நிர்வாக குழு உறுப்பினர்கள் கூட்டத்தில் என்னுடைய சித்தி அந்த சங்கத்தை சேர்ந்தவர்களிடம் எனது மனைவி ஓய்வு பெற்ற பாரத வங்கியின் அலுவலரின் மகள் தானே அவருக்கும் உரிய முக்கியத்துவம் கொடுப்பதிலேயே என்று கேட்டபோது கதிர்வேல் என்பவர் இதுபோன்ற பெண்களை நாங்கள் இப்படித்தான் நடத்துவோம் என்றும் சொன்னார். அங்கு மேலும் தகராறு ஏற்படும் சூழல் ஏற்பட்டதால் நாங்கள் அங்கிருந்து வந்து விட்டோம். 2021 – 2022 ஆண்டுகளில் என்னுடைய மனைவியும் நானும் ஏதேனும் வாட்ஸப் குழுக்களில் மெசேஜ் அனுப்பினால் அதை திறந்து பார்க்க வேண்டாம் என்றும் அவ்வாறு பார்த்தால் அவர்களின் ஃபோன்களில் உள்ள தகவல்களை எங்களால் திருட முடியும் என்று பொய்யான பிரச்சாரங்களை செய்து வந்துள்ளனர். சாஷ்தா என்பவர் அதுபோன்ற பொய்யான பிரச்சாரங்களை அங்கு வசிப்பவர்கள் மத்தியில் செய்து வந்ததோடு மட்டுமல்லாமல் நிர்வாக குழு கூட்டத்திலும் அவ்வாறு சொல்லி உள்ளார்.

5. அது குறித்து நான் சாஸ்தா என்பவரிடம் கேட்டபோது ஸ்ரீவித்யா நாகராஜன் என்பவர்தான் அவரது ஃபோனில் உள்ள வாட்ஸ் அப்பில் அதுபோன்ற தகவல்கள் திருடப்படுவதாக தெரிவதாக சொன்னதாகவும் எனவே தான் அவரும் அவ்வாறு சொன்னதாக குறிப்பிட்டார் நான் அதை மறுத்து நாங்கள் நல்ல நிறுவனத்தில் பணி செய்து வருவதையும் நாங்கள் அது போன்ற செயல்களில் ஈடுபடுபவர்கள் இல்லை என்பதையும் சொல்லிவிட்டு வந்தேன். எனவே என் மனைவி அவர்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுப்பதாக இருந்தார். அந்த குடியிருப்பு சங்க கமிட்டி உறுப்பினராக இருந்த சிவஞானம் என்பவர் நிர்வாக குழு கூட்டத்தில் நடந்த விவரங்களை மின்னஞ்சலில் என் மனைவிக்கு அனுப்பி வைத்தார்.

6. அங்கு நிறைய முறைகேடுகள் நடப்பது தெரிய வந்ததால் என் மனைவி சென்னை உயர் நீதிமன்றத்தில் DTCP மூலமாக உரிய விசாரணை நடத்த வேண்டும் என்று சொல்லி மனு செய்தார். உயர் நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த ஆய்வில் 16 குறைபாடுகள் கண்டறியப்பட்டது. ஆனால் 8 மாதங்கள் எவ்வித நடவடிக்கையும் அதன் மீது எடுக்கப்படவில்லை. எனவே நாங்கள் சென்னை உயர் நீதிமன்றத்தில் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எடுக்க கோரி மனுதாக்கல் செய்தோம். அதன் காரணமாக மீண்டும் குடியிருப்பு சங்கத்தினர் தவறான தகவல்களை எங்களுக்கு எதிராக பரப்பி வந்தார்கள்.

7. இதனிடையே நான் மாசு கட்டுப்பாட்டு வாரியத்தில் எங்கள் குடியிருப்பு சம்பந்தப்பட்ட விவரங்களை கேட்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் மனு கொடுத்திருந்தேன் அவர்கள் கொடுத்த மனுவில் நான்கு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் உள்ளதை மறைத்து ஒரு கழிவுநீர் சுத்தகரிப்பு நிலையம் உள்ளதாக மாசு கட்டுப்பாட்டு வாரியத்திற்கு தகவல் கொடுத்துள்ளார்கள் மேலும் அதன் மூலமாக 345 குடியிருப்பு வாசிகளுக்கு கார் பார்க்கிங் ஏற்படுத்தி கொடுப்பதற்காக அந்த விவரத்தை அந்த சங்கத்தினர் மறைத்துள்ள விவரமும் எனக்கு தெரியவந்தது. எனவே நான் தேசிய பசுமை தீர்ப்பாயத்திற்கு மேற்கண்ட குறைபாடு சம்பந்தமாக விசாரிக்க கோரி மனு தாக்கல் செய்திருந்தேன். மனு எண். 115/2024 மற்றும் மனு எண். 148/2024 என்ற மனுக்களை பில்டருக்கு எதிராக தாக்கல் செய்திருந்தேன். அதை விசாரணை செய்த தேசிய பசுவை தீர்ப்பாயம் பில்டருக்கு எதிராக ரூபாய் 71,70,000/- அபராதம் விதித்தார்கள்.

8. இதனிடையே மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தில் இருந்து பறக்கும் படையை சேர்ந்த திரு சிலம்பரசன் என்பவர் ஆய்வுக்காக வந்திருந்தார் அவரது ஆய்வில் கோயில் நிலம் மற்றும் திறந்தவெளியில் குடியிருப்பின் கழிவுநீர் நேரடியாக வெளியில் அனுப்பப்பட்டுள்ள விவரம் தெரியவந்தது. 08/04/2024 அன்று திரு சிலம்பரசன் என்பவர் எனக்கு போன் செய்து என்னை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு வர சொன்னார் நான் அங்கு சென்றேன். அவரிடம் அந்த சங்க உறுப்பினர்கள் திரு.

ரங்கநாதன், திரு.புகழேந்தி ஆகியோர் பொய்யான தகவல்களை சொல்லிக் கொண்டிருந்தார்கள் நான் அங்கு சென்ற பிறகு அங்கு நடக்கும் விதிமீறல்களை அவரிடம் காட்டுவதற்காக அவரை கழிவுநீர் வெளியில் அனுப்பப்படும் இடத்திற்கு அழைத்துச் சென்றேன். நான் அந்த அதிகாரியிடம் அந்த நடக்கும் விவரங்களை சொல்லு சொன்னதால் ரங்கநாதன் என்னை ஓத்தா என்று சொல்லி என்னை அடிக்க வந்தார்.

9. அவரை அங்கு அழைத்துச் சென்ற பிறகு கழிவுநீர் வெளியேறிய விவரம் தெரிந்தது மேலும் அந்த நீர் முழுவதும் மஞ்சள் நிறத்தில் காணப்பட்டது. ரங்கநாதன் அந்த இடத்தை குடியிருப்பிற்கு சம்பந்தப்பட்ட இடம் என்று பொய்யுரைத்தார். அதன்பிறகு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தை சேர்ந்த அது அதிகாரி அந்த விவரங்களை குறித்துக் கொண்டு அங்கிருந்து சென்று விட்டார் ரங்கநாதன் என்பவர் என்னை ஆபாசமாக திட்டி தாக்க வந்தது குறித்தும் மேலும் அங்கு நடைபெறும் விதிமீறல்கள் சம்பந்தமாகவும் நான் காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் கொடுத்தேன். ஆனால் அந்த புகாரின் மீதும் போலீசார் உரிய நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்தி வந்தார்கள் சில காலம் கழித்து தவறான பிரிவிற்கு நான் புகார் கொடுத்து விட்டதாகவும் சட்டம் ஒழுங்கு காவல் நிலையத்தில் புகார் கொடுக்கும்படி சொல்லி என்னுடைய மனுவை முடித்து விட்டார்கள்.

10. இதனிடையே என் மனைவி மகளிர் ஆணையத்தில் கொடுத்த புகார் சம்பந்தமாக மீண்டும் தாழம்பூர் காவல் நிலையத்தில் விசாரணை செய்வதற்காக அழைத்தார்கள் அங்கு காவல் ஆய்வாளர் குடியிருப்பு சங்க நிர்வாகிகள் பெரிய ஆட்கள் என்றும் நாங்கள் அதன் மீது மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்றும் மனுவை முடித்துக் கொள்ளும்படி சமரசம் செய்தார். அவரும் நீதிமன்றத்தில் இந்த பிரச்சனையை பார்த்துக் கொள்ளும்படி சொல்லி அனுப்பி விட்டார். அதனைத் தொடர்ந்து தாழம்பூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சங்க நிர்வாகிகள் என் மீது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் அத்துமீறி நுழைந்து தகராறு செய்ததாக சொல்லி புகார் கொடுத்துள்ளதாகவும் காவல் நிலையம் வரும்படி அழைத்தார். நான் காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொன்னேன் மேலும் மாசு கட்டுப்பாடு வாரிய அதிகாரி வந்து ஆய்வு செய்த விவரத்தையும் இந்தியன் எக்ஸ்பிரஸ் நாளிதழில் பிரசுரம் செய்த விவரத்தையும் காவல் உதவி ஆய்வாளரிடம் காண்பித்தேன். காவல் உதவி ஆய்வாளர் அந்த விசாரணையை முடித்து விட்டார்.

**நேரமின்மையின் காரணமாக பிராமண வாக்குமூலம் ஒத்திவைக்கப்படுகிறது**

S/d-K.Nilavarasan, 24.07.2025

District Munsif cum Judicial Magistrate,

Thiruporur.